விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka ★★

# ஈழநாடு

மலர் 16 The Eelanadu இதழ்: 136

யாழ்ப்பாணம் ஆனி 15 ஜ. ஆகிர் 8 சனிக்கிழமை 29-6-74

JAFFNA COLLEGE GRADUATE LIBRARY 1-JUL 1974

நவீன கணிதம்
(தபால் மூலம்)
குறைந்த செலவில், சிறந்த முறையில் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளுக்கும், கல்வித்தராதர வகுப்பிற்கும் (...), ஆசிரியர்களுக்கும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கும் தபால் மூலம் போதிக்கப்படும்.
...யில் நடைபெறும் வகுப்புகள் 5 ... 8 மணி வரை நடைபெறும்
விபரங்களுக்கு:-
மொடேர்ண்
எட்யூகேஷன் சென்ரர்
நெல்லியடி—கரவெட்டி

# கச்சதீவு ஒப்பந்தம் கைச்சாத்தானது

## கடல்எல்லைமுறையில் அது இலங்கைக்கே சொந்தம்

(நமது நிருபர் காமினி நவரத்ன)

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நீண்டகாலமாகத் தீராத பிரச்னையாக இருந்து வந்த கச்சதீவுப் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாணப் பட்டுவிட்டது. இதுசம்பந்தமான ஒப்பந்தத்தில் இலங்கைப்பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் கைச்சாத்திட்டுள்ளனர். இந்த ஒப்பந்தத்தின்படி கச்சதீவு இலங்கைக்கே சொந்தமாகு மென்பது உறுதியாகிவிட்டது. ஆனாலும் ஒப்பந்த விபரங்கள் வெளியிடப்படவில்லை.

கச்சதீவு சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையில் ராஜீய ரீதியில் நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து சென்ற புதன்கிழமை உடன்படிக்கை உருவாக்கப்பட்டு, அன்று முற்பகல் 11 மணிக்கு ஒப்பந்தத்தில் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் ஏககாலத்தில் கைச்சாத்திட்டனர்.

இதன் பின் இலங்கைப் பாதுகாப்பு வெளிவிவகார இலாகாச் செயலாளர் திரு. டபிள்யூ. ரி. ஜெயசிங்கா இலங்கைப் பிரதமர் கைச்சாத்திட்ட ஒப்பந்தப் பிரதியை எடுத்துக்கொண்டு புதுடில்லிக்குப் பயணமானார். இதேசமயம் இந்திய வெளி உறவுச் செயலாளர் திரு. கேவல்சிங், இந்தியப் பிரதமர் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரதியுடன் கொழும்புக்கு நேற்று வந்துசேர்ந்தார்.

கச்சதீவு சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையில் இருநாட்டுப் பிரதமர்களும் கைச்சாத்திட்ட பின்னரே கச்சதீவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக இலங்கையிலும் இந்தியாவிலும் உத்தியோக பூர்வமான அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

ஆயினும் கச்சதீவுப் பிரச்னையில் உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுவிட்டதாகவும் இலங்கையில் 'ஈழநாடு' மட்டுமே நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### இரகசியமாக நடந்த பேச்சு

1963-ம் ஆண்டில் இலங்கையின் பிரதமமந்திரியாக இருந்த திரு. டட்லி சேனநாயகா இந்தியா சென்று பேச்சுவார்த்தை நடத்தியபோது கச்சதீவுப் பிரச்னையும் அதில் இடம்பெற்றது. ஆயினும்

[4-ம்பக்கம் பார்க்க]

## இலங்கையில் மகிழ்ச்சி

கொழும்பு, வெள்ளி

கச்சதீவு சம்பந்தமாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டிருப்பது இலங்கையிற் பொதுவசிக அரசியல் வட்டாரங்களில் மகிழ்ச்சியும் வரவேற்பும் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குகிடைத்த பெருவெற்றி இதுவென்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு. எம். எஸ் செல்லச்சாமி இந்த உடன்படிக்கையை வரவேற்றார். இலங்கை மீது இந்தியா கண்வைத்திருக்கிறதென்ற சிலர் பூச்சாண்டி காட்டியதற்கு நாடு பிடிக்கும் ஆசை இந்தியாவுக்கு இல்லை என்பதை இந்த உடன்படிக்கையின் மூலம் இந்தியா தெளிவாக்கியுள்ளதென்றார் அவர்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசும் இந்த உடன்படிக்கையை மகிழ்ச்சியோடு வரவேற்றது.

ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவிடம் இதுபற்றிக் கேட்கப்பட்டபோது உடன்படிக்கை விபரம் எதுவும் தமக்குத் தெரியாததால் தாம் இதுபற்றி இப்போது எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை என்றார். (சி. ப. ரி.)

## கச்சதீவிலிருந்து மேற்கே 1 மைல்வரை இலங்கைக்கு

கொழும்பு, வெள்ளி

'பாக்குநீரிணைக்கும் பாம்பன் பாலத்துக்குமிடையிலான கடல்பிராந்திய எல்லையை நிர்ணயித்ததன்மூலம் கச்சதீவு சம்பந்தமான பிரச்னைக்கு முடிவு காணப்பட்டுவிட்டது. கச்சதீவிலிருந்து மேற்கும்பக்கமாக ஒருமைல் தூரம்வரையுமுள்ள கடல் பிராந்தியம் இலங்கைக்குச் சொந்தமாகும். இதன்பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கே உரியது'.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு அமைச்சரகம் இலங்கை-இந்திய நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள உடன்படிக்கை சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:—

இலங்கை — இந்திய கடற்பிராந்திய எல்லை நிர்ணயிப்பு மூலம் குடியேற்ற ஆட்சிக்காலத்தின்பின் தீர்க்கப்படாமல் இருந்துவந்த பெரும் பிரச்னை ஒன்றுக்கு முடிவு காணப்பட்டுவிட்டது. இந்த உடன்படிக்கையினால் இந்தியாவுக்கும்இலங்கைக்குமிடையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்துள்ளது.

கடற்பிராந்திய எல்லை நிர்ணயிப்பு மூலம் கப்பல்போக்குவரத்து, சமுத்திர மேற்கொள்ளுதல், கனிப்பொருள் ஆராய்ச்சி, மீன்பிடி போன்றவைகளை இலங்கை அரசு இப்பிராந்தியத்திற்குள் மேற்கொள்ள உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தினால் இவ்விரு நாடுகளுக்குமிடையில்

4-ம் பக்கம் பார்க்க

## "இராமநாதன் கனவு நனவாகவே வளாகம்"

—திரு. மாணிக்கவாசகர்

திருநெல்வேலி, வெள்ளி


மறைந்த சேர் பொன். இராமநாதனின் கனவு நிறைவு பெற எமது அரசாங்கம் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியை பல்கலைக்கழக வளாகமாக மாற்றிய மைக்க முன்வந்ததையிட்டு நாம் எல்லோரும் எமது அரசுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்''

இவ்வாறு நேற்று மாலை திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ. சனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற வெற்றோர் ஆசிரியர் சங்ககூட்டத்துக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடபகுதி கல்வி அதிபதி திரு. த. மாணிக்கவாசகர் கூறினார்.

அவர் மேலும் கூறும் பொழுது:-

தற்பொழுது கல்வி கற்று வரும் மாணவர்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைக்கு மாற்றப் படஇருக்கின்றார்கள். அவர்கள் அங்கு கல்வி கற்க விரும்பாவிடின் யாழ்ப்பாணத்திலுள்ள யாழ். மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, இந்து

4-ம் பக்கம் பார்க்க



நயினை நாகபூஷணி அம்பாளின் எழுந்தருளித் தோற்றத்தை மேலேயுள்ள படம் காட்டுகிறது. கடந்த 20-ம் திகதி நயினை அம்பாள் உற்சவம் ஆரம்பமானது. எதிர்வரும் 3-ம் திகதி ரதோற்சவமும், 4-ம் திகதி தீர்த்தத திருவிழாவும் நடைபெறும்.

[படம் உதவியவர்: பெ. த. இரத்தினசிங்கம்]

## திருமணம்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| அம்பிகாபதி [பிரதம வைத்திய அதிகாரி அரசினர் வைத்தியசாலை தலாத்துஓயா (கண்டி)] | ஜெயலக்ஷ்மி தாம்பரம் (சென்னை) |

திகதி:- 1-7-74 திங்கட்கிழமை
நேரம்:- மு. ப. 9 முதல் 10 மணிவரை
இடம்-- பிள்ளையார் கோவில், பழம் ரோட், யாழ்ப்பாணம்.

உறவினர் நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

ப. சுப்பிரமணிய ஐயர் (Lands Oficer C. G. R. மருதானை)
ப. சோமாஸ்கந்தஐயர் பிள்ளையார் கோவில் பழம் ரோட், யாழ்ப்பாணம்.
ப. தியாகராஜா லக்ஸபான குறூப் மஸ்கெலியா.
வி. கிருஷ்ணன் தென் இந்திய புகையிரத சேவை, தஞ்சாவூர்.
133

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சாந்தி (சுன்னாகம்)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர் சாவித்திரி
ஐக்கம்மா
ச. 4-15 ஞா 10-30
RUTHLESS FOUR

ஸ்ரீ முருகன்
(அடைத்தப்பு)
தினசரி 6-30, இரவு 9-30
ஜெய்சங்கர் - சுந்தரராஜன்
நடித்த
நம்மகுழந்தைகள்

றியோ (யாழ். நகர மண்டபம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
3-வது வாரம்
ஜெய்சங்கர்—வாணிஸ்ரீ
நடித்த
அவசரக் கல்யாணம்

ஸ்ரீதர் சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 4-45, 7-00, 9-45
Guilianno Gemma
EVEN ANGELS EAT BEANS
(Color)

ராணி சினிமா
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—ஜமுனா
நம்பியார்—ரங்கராவ்
நடித்த
நிச்சய தாம்பூலம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—ஜமுனா
வீரப்பா—சரோஜாதேவி
நடித்த
தங்கமலை ரகசியம்
(புதிய கொப்பி)

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு
காலை 10-30

இது ஒரு வழக்கமான கதை அல்ல.
முற்றிலும் மாறுபட்ட கதை.
தனக்குரிய மனைவியை, தான் அடையவேண்டிய
அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும்
ஒரு கோடீஸ்வரனின் கதை
ஆறு குணங்கள் கொண்டவனாம் ஒரு பாவை
அது யாரோவவரோ — அவன்தான்......

ராமன் தேடிய சீதை

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்:
ப. நீலகண்டன்
இசை:
எம். எஸ். விஸ்வநாதன்

லிடோ [யாழ்ப்பாணம்]
தினசரி
10-30, 4-45, 7-00 & 9-45
கொபின்(f)போர் ஏ கன்(f)பயிற்றர்
COFFIN FOR A GUN FIGHTER

சீராக செயல்பட்டால்

# பத்து ஆண்டுகளில் காணி சொந்தமாகும்!

வீசாலை, வெள்ளி
பொருளாதார அபிவிருத்தியும் உணவில் தன்னிறைவும் காண்பதன் பொருட்டு அரசாங்கம் செயல்படுத்தி வரும் திட்டங்களின்கீழ் படித்தவாலிபர்களுக்கு காணிப் பங்கீடு செய்து அவர்களை விவசாயத்திலும் பொருளாதார அபிவிருத்திப் பணியிலும ஊக்குவித்தல் மிக முக்கிய தேவையாகும். இதன்படி உங்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டுள்ள காணியைப் பயன்படுத்துவதின் மூலம் பத்து ஆண்டில் அக்காணி உரிமையாகும்தில ஏற்படும் அக்கறையின்றி நடாந்தால் உரிமையாகும் பாக்கியத்தை இழக்கவேண்டும்.

பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த தன்பக்கேணியில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட 280 ஏக்கர் விஸ்தீரணமான செட்டியார் தென்னந்தோட்டக்காணியில் படித்த வாலிபர்க்கான கூட்டுறவுப் பண்ணையொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்து பேசிய யாழ். கச்சேரி திட்டமிடல் அதிகாரி திரு. சண்முகலிங்கம் தனது உரையில் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதித்துறை, சாவகச்சேரி பளை காரியாதிகாரிபிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30படித்த வாலிபர்க்கு தலா 5 ஏக்கர் வீதம் பகிர்ந்து கொடுக்கப்பட்டு பண்ணை அங்குரார்ப்பணம் நேற்று நடைபெற்றது.

திரு. சண்முகலிங்கம் 30 வாலிபர்களையும் நோக்கிப் பேசும்போது இத்தோட்டத்தில் பொருளாதாரம் உணவு உற்பத்திவரை ஏதுவான காரியங்கள் அரசின்றி உண்டு. உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை கூட்டுறவு அடிப்படையில் செய்து அதன்மூலம் பொருளாதாரம் உயர்பாடுபடுங்கள். கோழி வளர்ப்பு, ஆடுவளர்ப்பு மிளகாய்ச்செய்கை, கிழங்கு பின்னல் காய்கறிசெய்கை என்பவற்றால் உங்கள் வருவாயை உயர்த்தி உங்களுக்கு வழங்கப்பட்டகாணி உங்களுக்கு 10 வருடத்தில் உரிமையாகும் சந்தர்ப்பத்தை ஆக்கிக் கொள்ளுங்கள் 10 வருடத்துள்ஒருநாட்தானும்குழப்பியடித்து சென்றால் உரிமையை இழப்பீர்கள் அப்படி இயலாதவர்கள் இப்போதே உத்தரவு பெற்றுக்கொள்ளலாம்'' என்றார்.

பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி திரு. த மார்க்கண்டு கிளிநொச்சி கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. வி. எஸ், இராமநாதன் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். மகேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு ரி ஆறுமுகம் பண்ணையில் பொறுப்பாளராகவும் திரு. கே. துரைச்சாமி பொது முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பொலிஸாருக்கு எதிரான புகார்கள்

கொழும்பு, வெள்ளி
சுமார் 200க்கு மேற்பட்ட புகார்கள் பொதுமக்களாலும், குற்றச்சாட்டுக்களின் மீது சந்தேகத்தின் பேரில் கைதானவர்களாலும் கடந்த 6 மாதகாலத்திற்குள் பொலிஸாருக்கு எதிராக பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் பொலிஸாருக்கு எதிராகச் சுமார் 52 குற்றச்சாட்டுகளும், மே மாதத்தில் 34 குற்றச்சாட்டுகளும் பதிவாகியுள்ளனவாம்.

சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டவர்களாலேயே கூடுதலான புகார்கள் பொலிஸார் மீது சுமத்தப்படுவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடத்தில் பொலிஸாருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் தொகை 429 ஆக இருந்தது.

REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p m.
Michael Caine
in
TOO LATE THE HERO

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி - நிர்மலா
வெகுளிப்பெண்

நாகம்ஸ்
[கன்னாகம்]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப 2-30
சிவாஜி - சரோஜாதேவி
விடிவெள்ளி

3-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா - (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
இதுவரை எந்தப் படத்திலுமில்லாத பெண்கள் கூட்டம்.
'பொன்னூஞ்சல்' படத்தில் எல்லாப் பாடலுமே தேனாக இனிக்கிறது.
சிவாஜி-உஷாநந்தினி ஜோடியின் காதல்காட்சி வாலிபர்களையும், வனிதையர்களையும் இன்பத்திலாழ்த்தும்.
நகரத்தில் நல்லபடம்! குடும்பத்துடன் பார்க்கவேண்டிய தீந்தமிழ் காவியம்.
சிவாஜி, உஷாநந்தினி, முத்துராமன், ஏ. சகுந்தலா, சோ, மனோரமா.
'பொன்னூஞ்சல்'
உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளலாம்.
டைரக்ஷன்: சி. வி. ராஜேந்திரன் [illegible]

வில்லிசையில்

## குடும்பத் திட்டம்

கொழும்பு, வெள்ளி
ஐக்கிய நாடுகள் நிறுவனம் இவ்வாண்டை (1974) உலக சனத்தொகை ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளதை ஒட்டி, எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் ருமேனியாவில் உள்ள புச்சாரெஸ்ட் நகரில் சர்வதேச மகாநாடொன்று நடைபெறவிருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கையிலும் விசேட நிகழ்ச்சிகள் பல நடைபெறவிருக்கின்றன. குறிப்பாக வில்லுப் பாட்டு நிகழ்ச்சி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. ஈழத்தின் பிரபல்ய மேடை, சினிமா நடிகரும் வில்லிசை வேந்தருமான திரு. லடீஸ் வீரமணி குழுவினர் பங்குபற்றவிருக்கும் இந்த சிறப்பு வில்லிசை நிகழ்ச்சியை, இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்திற்காக கொழும்பு கலைச் சங்கம் தயாரித்தளிக்கவிருக்கின்றது.

இந்த வில்லிசைக்கான பாடல், வசனங்களை, பிரபல மண்வாசனைக் கலைஞரும் எழுத்தாளருமான திரு. வி. என். பெரியசாமி எழுதியுள்ளார் வயது வந்தவர் மட்டுமே இந் நிகழ்ச்சிக்கு அனுமதிக்கப் படுவர்.

......

## கல்வியின் பயன்பற்றி கல்லூரி அதிபர்

யாழ்ப்பாணம், சனி
''கல்வியறிவு எல்லா மக்களுக்கும் என்றும் தேவையான ஒன்று. அறிவின் அடிப்படையில் நாட்டில் பசி, பட்டினி அறியாமை முதலியவற்றை மாற்ற முடியும்''

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் திரு. பி. வெற்றிவேலு கூறினார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஓர் இரண்டு மாடிக் கட்டிடத்தை அமைக்க அத்திவாரமிடப்பட்டபோது அவர் பேசினார். திருவாளர்கள் வி. எம். கணபதிப்பிள்ளை, ப. கணேசபிள்ளை, எம். ரி. சுப்பிரமணியம் ஆகியோர் மூன்று அறைகளுக்கும் முறையே சைவாசாரப்படி அஸ்திவாரமிட்டு நிதிவழங்கினார்கள். (கு வி ம)

# கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து பராமரிக்கத் திட்டம்

வண்ணார்பண்ணை, வெள்ளி
கட்டாக்காலி மாடுகளையும் பராமரிக்க முடியாத கால்நடைகளையும் பராமரிக்கும் திட்டமொன்றை வேலணைக் காரியாதிகாரி நடைமுறைப் படுத்தவுள்ளார்.

பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்த கால்நடைகள் பராமரிக்கும் நிலையம் ஆரம்பிக்கப்படுகிறது. இதற்கென 5000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வேலணை அராலி சந்தியில் உள்ள வெளியில் 25 ஏக்கர் நிலத்தில் இந்த நிலையம் அமைக்கப் படவிருக்கிறது. இதற்கானஏற்பாடுகளை இப்பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ளனர்.

கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு இந்த நிலையத்தில் விடப்படும் என்றும், ஆடு மாடுகளைப் பராமரிக்க முடியாமல் இருப்பவர்கள் இந்த நிலையத்தில் அவற்றை ஒப்படைத்து ஒரு கால்நடைக்கு மாதம் 2 ரூபா பராமரிப்புப் பணமாக செலுத்தலாம் என்றும், அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. தெட்சணாமூர்த்தி தெரிவிக்கார்.

கட்டாக்காலிகளினால் ஏற்படும் பயிர் அழிவைத் தடுப்பதற்கும், இவற்றின் மூலம் சேரும் எருக்களை சேகரித்து [illegible] கூட்டுப்பசளை தயாரிப்பதற்கும் இத்திட்டம் பயன்படும் என்று வேலணைக் காரியாதிகாரி திரு. எம். கார்த்திகேசு தெரிவித்தார். தீவுப்பகுதியில் உள்ளவர்கள் தமது கால்நடைகளை இந்த நிலையத்தில் விட்டு பராமரிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## கடைக்காரர் தொடர்ந்து றிமாண்டில்

யாழ்ப்பாணம், சனி
மண்டைதீவில் நஞ்சு தோய்த்த வாய்ப்பனை உண்ட இரு சிறுமிகளின் சம்பவம் தொடர்பாக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கடைச் சொந்தக்காரரான சின்னராசாவின் மனைவி சரஸ்வதி விடுதலைசெய்யப் பட்டுள்ளார்

சின்னராசா தொடர்ந்து அடுத்த மாதம் 8-ந் திகதி வரை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இறந்த சிறுமி சிதம்பரப்பிள்ளை ராதாதேவியின் இளைய சகோதரியான சிதம்பரப்பிள்ளை ராஜேஸ்வரி தொடர்ந்தும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார். (ஊ-ம)

# பழைய ... மறக்கச் சொ...

டாக்கா, ஜூன்
பங்களாதேஷிற்கும் பாகிஸ்தானிற்குமிடையே ... பலுப்புவதற்கான பிரச்... உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று பங்களா... தேஷ் பிரதமமந்திரி ஷேக் முஜிபுர் ரஹ்மான் பாகிஸ்தான் பிரதமர் பூட்டோவிடம் கூறியுள்ளார்.

பங்களாதேஷிற்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் பிரதமருக்கு அளிக்கப்பட்ட விருந்தின்போது ஷேக் ... வற்புறுத்தி...

நீடித்த அமைதிக்கான நிலைமையைத் தோற்றுவிக்க வேண்டும். பலவந்தத்தின் ... பிரச்னைகளைத் தீர்க்க ... யாது. பேச்சுவார்த்தை ... மூலமே தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள முடியும் என... அவர் ஜனாதிபதி பூட்டோவிடம் கூறினார்

பிரதமர் பூட்டோ பதிலளிக்கையில் இருநாட்டுப் பிரதமர்களுக்குமிடையில் நடைபெறவிருக்கும் பேச்சுக்கள் இருநாடுகளுக்குமிடையில் உறவுப்பாலமொன்றைப் பலப்படுத்துவதாய் அமையும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

1971ம் ஆண்டு இடம்பெற்ற சம்பவங்களின்போது பாகிஸ்தான் தலைவர்கள் தவறு இழைத்துள்ளார்கள் என்பதை பூட்டோ ஒப்புக்கொண்டார். ஆனால் அவை மறக்கப்படவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பாக். பிரதமர் நேற்று பாரதத்தின் வானப்பிராந்தியத்தின்மீதாக விமானத்தில் ...

# பெருந்தோ... மண்ணு...

மாவிட்டபுரம், வெள்ளி
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பலாலி காங்கேசன்துறை கிளைகளில் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த தரமற்ற பாண் வெட்டிப் புதைக்கப்பட்டது.

மக்கள் உண்பதற்கு உதவாத பாண் சங்கக்கடைகளில் விநியோகிக்கப்படுவதாக பொதுமக்கள் செய்த புகாரையடுத்து தரமற்ற பாண் விநியோகிக்கும் இடங்களுக்குச் சென்று, அவற்றைப் பரிசோதித்து வெட்டிப் புதைத்துமக்களுக்கு தரமான பாண் கிடைக்கச் செய்வதற்கு காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு எஸ். புவிராஜசிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 23வது கிளையான பலாலிக் கடையில் விநியோகிப்பதற்காக வைத்திருந்த 119 ... தல் பாணில் 113 ... பாண் தரமற்றதென திரு. எஸ். புவிராஜசிங்கம் கண்டுபிடித்து அதை வெட்டிப் புதைக்க உத்தரவிட்டார். அத்துடன் காங்கேசன்துறை 27வது கிளையிலும் 55 ...

# ''சுருட்டுக் கூ... விரைவில் ...

வண்ணார்பண்ணை, வெள்ளி
சுருட்டுத் தொழில் அபிவிருத்திக்கான கூட்டுத்தாபனம் அமைப்பது பற்றிய திட்டத்தை விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இதற்கான நிதி ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்யுமாறும் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. டி. பீ. சுபசிங்காவை கோரும் தீர்மானம் ஒன்றை இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு க. முதலி... வர் அனுப்பி வைத்துள்ளனர்
இதன் பிரதிகள் நிதியமைச்...

# பழைய சம்பவங்களை ...க்கச் சொல்கிறார் பூட்டோ

[illegible] பறந்து செல்கையில் பிரதமர் இந்திரா காந்திக்கு செய்தி யொன்றை அனுப்பினர். இந்திய மக்களுக்கும் தலைவர்களுக்கும் அவர் தமது வாழ்த்துக்களை அச்செய்தியில் தெரிவித்துக்கொண்டார்.

## சிக்கிம் தலைநகரில் அமைதி

கங்டொக், ஜூன் 28

சிக்கிம் தலைநகரில் இப்பொழுது பொதுவாக அமைதி நிலவுகின்றது. என்றாலும் அரசமாளிகை ஆதரவாளர்கள் நேற்று சிறு அளவில் மன்னருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

இதேசமயம் மன்னருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவந்த மக்களில் பெரும்பகுதியினர் கிராமப் பகுதிகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். சுமார் ஆறாயிரம் பேர் இன்னமும் தலைநகரிலேயே இருந்துவருகிறார்கள்.

சிக்கிம் காங்கிரஸ் தலைவர்கள் இந்தியத் தலைவர்களுக்கு தந்திகளை அனுப்பி மன்னரின் கோரிக்கைகளைப் புறக்கணிக்கும்படி கோரியுள்ளதுடன் சட்ட சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அரசியல் சட்டத்தை செயல்படச் செய்வதற்கு உதவும்படி கோரியுள்ளனர். சிக்கிம் காங்கிரஸ் புதுடில்லியில்தொடர்ந்து ஆலோசனைகளை நடத்தி வருகிறார்.

# ...பெருந்தொகையான பாண் ...மண்ணுக்கு இரை!

[illegible] ...தல் பாண் புதைக்கப்பட்டது. இந்நடவடிக்கையின் எதிரொலியாகத் தற்போது இப்பகுதிகளில் தரமான பாண் விநியோகிக்கப்படுவதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

## புதிய அதிபர்

மீசாலை, வெள்ளி

அம்பிட்டியா விலுள்ள இலங்கைநாயகி தேசிய குருமடத்தின் புதிய அதிபராக வண. பிதா கலாநிதி ஹறோல்ட் பண்டிதரத்ன அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

......

## நியமனம்

பூநகரி, வெள்ளி

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மட்டுவில் நாடு கிளை முகாமையாளர் திரு. அ. க. இராசேந்திரம் கிளிநொச்சித் தொகுதியின் பூநகரிப்பகுதிக்குச் சமாதான நீதவானாகவும் மாணவிசாரணை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார். தம்பிராய் கிராம முன்னேற்றச் சங்கத்தின் முன்னாள் காரியதரிசியான இவர் பூநகரி மகாவித்தியாலய பெற்றார் ஆசிரிய சங்கச் செயலாளராவர்.

(அ)

# ...சருட்டுக் கூட்டுத்தாபனம்: ...விரைவில் செயல்படுத்துக''

[illegible] ...சருக்கும், தோட்டத் தொழில் அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானம் இச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணச் சுருட்டுக்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் யாழ். மாவட்டத்தில் உள்ள 12,000 தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கமுடியுமென்றும், அந்நியச் செலாவணியை மிச்சம் பிடிக்கமுடியுமென்றும் அத்தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கச்சதீவுபற்றி தமிழ் நாட்டில் அவசரக்கூட்டம்

சென்னை, ஜூன் 28

இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே கச்சதீவுபிரச்னை தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டுள்ள இதேவேளையில், இதுபற்றி ஆலோசிப்பதற்காக தமிழ் நாடு சட்டமேலவைகட்சித்தலைவர்களின் அவசரகூட்டம் ஒன்று நாளை [29-ந்திகதி] காலை 10 மணிக்கு சென்னையில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு முதல்வர் திரு. மு கருணாநிதி இக்கூட்டத்திற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

......

# ரூபசிங்கா தம்பதிகளின் மேற்காசிய விஜயம்

கொழும்பு, வெள்ளி

மேற்காசிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு பிரதமரின் மகள் திருமதி சுனேத்ரா ரூபசிங்காவும் அவர் கணவர் திரு. குமார் ரூபாசிங்காவும் நேற்றிரவு இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இவர்கள் புதுடில்லியில் இரண்டு நாளும் பம்பாயில் ஒருநாளும் தங்கிச் செல்வர்.

(சி.பி.ஏ)

## வெள்ளி விழா

யாழ்ப்பாணம், சனி

நாவலியூர். கதிஜா மகா வித்தியாலயத்தில் எழுத்தாளர் சுப. இளங்கீரனின் வெள்ளிவிழா ஜனாப் எம். எம். மக்பூல் தலைமையில் நடைபெறவுள்ளது.

(த)

......

## என்றியரசர் மெய்வல்லுநர் போட்டி

இளவாலை, வெள்ளி

இளவாலை புனித என்றியரசர் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இன்றுமாலை கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

திசில்ஸ், ஜேசஸ், சாம்ரொஸ், லில்லீஸ் ஆகிய நான்கு இல்லங்களைச் சேர்ந்த மாணவர்களும் தத்தமது இல்லங்களை முன்னணி வகிக்கத் தீவிரமாகச் செயற்பட்டு வருவதுடன் கல்லூரி வரலாற்றிலேயே மாணவிகளும் முதன்முறையாக அங்கம் வகிக்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு. தவரத்தினசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

......

## 1 லட்சத்து 60 ஆயிரம் கோவில்கள் அரசுடமையாகும்

சென்னை, ஜூன் 28

தமிழ்நாட்டில் உள்ள 1 லட்சத்து 60 ஆயிரம் கோயில்களையும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக ஹிந்து அறநிலைய அறக்கட்டளை அமைச்சர் திரு. கண்ணப்பன் இன்று தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் உள்ள இந்துக் கோயில்கள் மூலம் இவ் வருடம் சுமார் 9 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

......

## நடிக தம்பதிகள் பிரிந்தனர்

ரோம், ஜூன் 29

ஆங்கில திரையுலகின் பிரபல நடிக ஜோடியான பீட்டர் செல்லர்ஸும், பிரிட் எக்லண்டும் தமது 10 வருட மணவாழ்க்கையை விவாகரத்தில் முடித்துள்ளார்கள்.

கடந்த ஒருவருட காலமாக சிறுபூசல்களால் பிரிந்திருந்த இவர்கள் [illegible] யாக [illegible] காணப்பட்டார்களாம்.

## சேவை

எட்டு வழக்கில் விதிக்கப்பட்ட, நியந்தனை அறுதிமூலம் இழந்த காணிகளை மீட்க எமது ஸ்தாபனத்தின் புதிய நிர்வாகிகளுடன் தொடர்பு கொள்ளவும். பிராஜ்மல் என்ரப் பிறைசஸ், தையல் முத்து மாளிகை, 213/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 302

## கல்வி

1975 க. பொ. த. (சா) பரீட்சை மாணவர்களும் எம்மிடம் தபால் மூலம் கல்வி பயிலலாம். பாடம் ஒன்றிற்குச் சம்பளம் மாதம் ரூபா 3/- மட்டுமே இலவச விபரங்களுக்கு: றெக்ஸ் ரியூட்டறி, யாழ்ப்பாணம். 285

## தேவை

றீற்றச்சிங், பினிசிங் அனுபவம் உள்ள புகைப்படத் தொழிலாளிக்குவேலை உண்டு. விபரங்களுக்கு. கமலா ஸ்ருடியோ, கிளிநொச்சி. 309

## கிளிநொச்சியில் மணிவாசகர் விழா

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி திருநெறிக் கழகம் மணிவாசகர் விழாக் கொண்டாடியது. இவ்விழாவுக்குக் கிளிநொச்சி மாவட்டக் காணி அதிகாரி திரு. க. பரமேஸ்வரன் தலைமைவகித்தார்.

(அ)

## ஐ.தே.க.யாழ்.கிளை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத் தொகுதிக்கான ஐ. தே. கட்சி மத்திய செயற்குழுக் கூட்டம் திரு. பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது. இதில் நடைபெற்ற உத்தியோகஸ்தர் தெரிவில் திரு. பொ. கனகசபாபதி தலைவராகவும் செயலாளராக திரு. வி. ஏ. ஜெகநாதனும், தனாதிகாரியாக திரு. ஏ. மனோகரனும் தெரியப்பட்டனர். மற்றும் உத்தியோகஸ்தர்கள் கமிட்டி உறுப்பினர்கள் தெரிவும் நடைபெற்றது.

(அ)

# வர்த்தகம்

## விற்பனைக்கு

எங்களிடம் எல்லாவிதமான ரசாயனப் பசளைகள். உரவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ரி. சண்முகநாதன் அன்கோ, 134, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன் No. 7141. 330

மிளகாய், வெங்காயம், நெல் ஆகியவற்றுக்குரிய கிருமிநாசினிகளும், பசளை வகைகளும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். முர்தஸா டிஸ்றிபியூட்டர்ஸ், (முகமதலி அப்துலலி அருகாமையில்) 5, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். போன்: 515. 258

புதிய நிலையில் உள்ள பிறிஜிடெயர் குளிர்சாதனப் பெட்டி ஏஜென்டுகளின் ஒருவருட உத்தரவாதம். ஜோசெப், 13 றெயில்வே வியூ (கைகாட்டி முன்) ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம். 306

## விற்பனைக்கு

E N 3883 பெஜோ (Peugeot) 203 நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. மகிழ்ராஜன், யாழ்ப்பாணக்கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை அல்லது செல்வலக்ஷ்மிஸ், ஸ்ரான்லிரோட் யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளவும். 311


# SPOKEN ENGLISH

For Special Purposes, Trips Abroad Interviews etc.

Classes commence: 1 st JULY 1974

Contact the Principal, Mrs. J. G. Gunaratnam, B. Com, Dip in Commerce

INSTITUTE OF BUSINESS STUDIES

No. 3, off Somasunderam Avenue

CHUNDIKULI. 138


1973-ம் ஆண்டு 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின்கீழ் மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்குவதற்கான

# இடைக் காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ரோட் 54/15-ம் இலக்கத்தில் வசித்த காலஞ்சென்ற தில்லையம்பலம் வல்லிபுரத்தின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்கள் சம்பந்தப்பட்டவை.

காலஞ்சென்றவர்

யாழ்ப்பாணம் பிரதான வீதி சாந்த யோசப்கத்தோலிக்க அச்சகத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் செல்லத்துரை.

விண்ணப்பகாரரும்

வலயம்-யாழ்ப்பாணம் இல. T/10.

கொழும்புத்துறை சாந்த ஆன்ஸ் ஒழுங்கை 54/7ல் வசிக்கும் கந்தையா அருணகிரியும் கந்தையா நர்முவும்.

எதிர்மனுதாரர்கள்

1974-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ந் திகதியிட்டு 281-ம் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் முக்கிய உறுதிக்கூற்றுக்கள் முதற்தோற்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்திப்பட்டதின் பேரில் மேலதிக நம்பிக்கைப் பொறுப்பாளராகிய எச். ஏ. எல்லேபொல ஆகிய நான் கட்டளையிடுகிறதாவது:

இக்கட்டளையைப் பெற்றவராவுதல் அல்லது வேறு எந்த நபராவது 1974-ம் ஆண்டு ஆடி மாதம் 3-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக தக்க காரணங் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிருவாகத் தத்துவம் பெறுவதற்கு மேற்குறிப்பிட்ட விண்ணப்பகாரருக்குக் காலஞ்சென்றவரின் அடுத்த நெருங்கிய உரிமையுடையவர் என்ற வகையில் உரித்துடையவரென்று நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படும்.

ஒப்பம்

சோ. இராசநாதன்,

பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்காக.

1974-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ந் திகதி. 134


# அபிஷேகத் திரவியங்கள்

## சந்தனக்குழம்பு

(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக்கட்டைகளால் தயாரிக்கப்பட்டவை)

0 பழனி வாசனை விபூதி
0 அபிஷேக குங்குமம்
0 பஞ்சாமிர்த சாமான்கள்
0 நைவேத்திய சாமான்கள்
0 அஷ்டபந்தன மருந்து
0 அத்திபாரமிடும் பொருட்கள்
0 விவாக முகூர்த்த பொருட்கள்

வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்

0 ''ராதா'' பத்மினி ஐவ்வாது பத்தி
0 99 — 999 ஐவ்வாது பத்தி
0 இந்திராணி பத்தி
0 சக்தி, பூஜா அகர் பத்திகள்
0 மட்டிப்பால் பத்திகள்

விளைவு சூடம், சாம்பிராணி கோவில் தேவைகளுக்கான

சகலவிதமான சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குகள் ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தாரின் தயாரிப்புகள் மலிவாகக் கிடைக்கும்

# எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)

53, கே.கே.எஸ்.ரோட், யாழ்ப்பாணம். போன்: 7068

160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 35825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கண்ணாடி ஆடினால் எப்படி எமது முகத்தைப் பார்க்க முடியாதோ, அதேபோல் எமது மனம் ஆடினால் இறைவன் சரணகமலத்தை அடையமுடியாது.

அறிஞர்

ஈழநாடு
EELA NADU

28-6-74

## கண்ணுக்குள் மண்

கறுப்பு மிளகு என்று ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள் காய்ந்த பப்பாசிக்கொட்டைகள் எனக் கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சர் திரு. டி.பி. சுபசிங்க, ஏற்றுமதியாளர் மகாநாட்டில் கூறியிருப்பது பலருக்கு அதிர்ச்சியளிக்கும் செய்தியாகும்.

ஐரோப்பிய நாடுகளின் மூலை முடுக்குகளில் இன்றும் இலங்கை ஓர் அழகான தேயிலைத் தோட்டமென்றே நம்பிக்கை நிலவுகிறது. எமது தரமான தேயிலையே இந்தத் தப்பான அபிப்பிராயத்திற்குக் காரணமென்பதை விளக்கத் தேவையில்லை. இலங்கைத் தேயிலைக்குப் போட்டியாக இந்தியா, நேபாளம், சீனா, ஆபிரிக்க நாடுகள் தலை நிமிர்ந்து நிற்கும் இக்காலத்திலும் எமது தேயிலைக்குத் தனிமதிப்புண்டு. நிலையான கீர்த்தி கெடுவதற்கும் கொஞ்சக் காலம் செல்லவேண்டும்.

இது இவ்வாறிருக்க அண்மையில் நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் தரம் குறைந்ததாகவும், பழுதானவையாகவும், இருந்ததென அமெரிக்காவும் ஜப்பானும் அவற்றைத் திருப்பி அனுப்பிவிட்டன. அந்நியச் செலாவணிக்காக பெரிதும் போராடிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் இதைவிடப்பெரிய தோல்வி வேறெதுவுமிருக்க முடியாது.

நல்லபெயர் மங்கிப் போவதற்கு நாட்செல்லும் அதே நேரத்தில் நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்படத் தொடங்கிவிட்டால் அதை நீக்குவது முடியாதகாரியமாகிவிடும். ஆகவே நமது ஏற்றுமதிப் பொருட்கள் தரம் உயர்ந்ததாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும். இந்த உண்மையை ஏற்றுமதியாளர்களுக்கு இடித்துரைத்தவர் கைத்தொழில் விஞ்ஞானத் துறை அமைச்சர் திரு. டி. பி. சுபசிங்கா.

இந்த உண்மையை நாட்டின் உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் புரியமுடியவில்லையென்று நாம் நினைக்கவில்லை. உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் இரு தரமன் உண்டு. கண்ணுக்குள் மண்போட்டுக் காரியம் பார்க்கும் கூட்டம் ஒன்று; புறப் பணம் படைத்தவர் இவ்வித கோணல் வழிகளில் பொருள் தேடுவதில் தயங்கமாட்டார்கள். தூர நோக்கு அவர்களின் குறுகிய பார்வைக்கு அப்பாற்பட்டது. நாட்டின் வர்த்தக விருத்தியையும் நன்மதிப்பையும் பேண விரும்புகின்றவர் இன்னொரு சாரார். இன்றைய நெருக்கடியிலும் நாடு பிழைத்திருப்பது இவர்களைப் பொறுத்ததே.

கறுப்புச் சந்தையையும் பதுக்கல் வியாபாரத்தையும் எவ்விதத்திலும் ஒழித்துக்கட்ட முயல்கின்றது அரசு. இவ்வித ஏமாற்றுக்கார வர்த்தகக் கோஷ்டியையும் முளையில் கிள்ளிவிடவேண்டும். அமைச்சர் சுபசிங்கா ஏற்றுமதியாளருக்கு அறிவுரை வழங்குவதுடன் நிற்கவில்லை; ஏற்றுமதிப் பொருட்களின் கட்டாய தரப் பரிசோதனைத் திட்டத்தையும் ஆரம்பித்துவைத்திருக்கின்றார்.

இன்று நாட்டுக்கு ஒரு சோதனைக் காலம். இதை உணரவல்ல ஆற்றலும், அறிவும், தேச பக்தியும் அற்ற கூட்டத்தினருக்குக் கட்டுப்பாடும் பரிசோதனையும் அவசியமாகும்; இவ்வித நடைகளுக்கான் 'சுழி' ஓட வல்ல ஆசாமிகளை என்ன செய்வது?

நாய் வாலை நிமிர்த்தும் ஆற்றல் அரசுக்கு உண்டா? பொது நல உணர்வற்ற சமுதாயத்திற்கு அரசின் சட்ட திட்டங்கள் என்ன செய்யமுடியும்?

# வெளிநாடுகள் செல்லும் கோஷ்டிகளில் யாழ்.வாலிபர் இடம்பெறவேண்டும் என்கிறார்

## விளையாட்டுத்துறை அமைச்சர்

யாழ்ப்பாணம், சனி

'வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கை விளையாட்டு கோஷ்டிகளில் யாழ்ப்பாண வாலிபர்கள் இடம்பெறுவதில்லை என்றகுறை இருந்துவருகிறது. சில தமிழர்கள் இந்தக் கோஷ்டிகளில் இடம்பெற்றபோதிலும், அவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலையை சேர்ந்தவர்களாக இருப்பதில்லை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகள் செல்லும் கோஷ்டிகளில் யாழ்ப்பாண வாலிபர்கள் இடம்பெற இங்குள்ள விளையாட்டுக்கழகங்கள் அக்கறை எடுக்கவேண்டும்'

இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே.பி. ரதனாயக்கா, யாழ். அரசாங்க செயலகத்தில் நடந்த பகுதி விளையாட்டுத்துறை உதவி யோகத்தர்கள் மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா, வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒலிம்பிக் போட்டியில் இலங்கையிலிருந்து பெருந்தொகையான வீரர்கள் கலந்துகொள்ள முடியாத நிலையைத் தவிர்க்கும்பொருட்டு சமீபத்திலுள்ள இந்தியா, பாகிஸ்தான், மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து ஒரு விளையாட்டுப் போட்டியை நடாத்த நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அமைச்சர் சொன்னார்.

# சங்கு ஏற்றுமதி மூலம் இடைத்த வருமானம்

யாழ்ப்பாணம், சனி

கடந்த வருடம் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் மூலம் சுமார் 136,500 சங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் சுமார் 267,872 ரூபா அந்நியச் செலாவணியாகக் கிடைத்துள்ளது. அந்நியச் செலாவணிச் சான்றிதழ்மூலம் சுமார் 157019 ரூபா சம்பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திற்கு முன்னைய வருடமான 72-ல் 47596 சங்குகளும், 71-ல் 35215 சங்குகளும் கிடைத்துள்ளன. இதன்மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி முறையே சுமார் 62920 ரூபா, 52743 ரூபாவாகும். அந்நியச் செலாவணிச் சான்றிதழ்மூலம் சம்பாதிக்கப்பட்ட செலாவணி முறையே சுமார் 37363 ரூபா, 11992 ரூபாவாகும்.

சங்கு உற்பத்திக்கான கடனாக ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க நயினாதீவுக் கிளைக்கு இவ்வருட மே மாதம்வரை சுமார் 15000 ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. (த)

### இராமநாதன்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளை தவிர்ந்த ஏனைய கல்லூரிகளில் கல்வி கற்கலாம். முன்கூறிய கல்லூரிகளில் இடவசதி குறைவை முன்னிட்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது திருநெல்வேலி முதலுதலம்பிள்ளை பாடசாலையை தரமுயர்த்தி, அங்குபெரும் தொகையான மாணவர்கள் கல்வி கற்கசகல வசதிகளும் செய்து வருகின்றோம்." என்று குறிப்பிட்டார்.

பெற்றோர்கள் சார்பில் முன்னைநாள் மேயரும் யாழ் மாநகரசபை 15-ம் வட்டார உறுப்பினருமான திரு. சி. நாகராசா பேசுகையில், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழக வளாகமாக மாறுவதையிட்டு நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் சேர் பொன் இராமநாதன் ஞாபகச் சின்னங்களில் ஒன்றான இக்கல்லூரியை அழியவிடாது வேறு ஒரு இடத்திலாவது பரமேஸ்வராக் கல்லூரி என்ற பெயரில்ஒரு பாடசாலையை தற்பொழுது உள்ள அரசாங்கம் கட்ட முன்வரவேண்டும்." என்றார்.

மற்றும் பலரும் பேசினர்.

## இன்று அரங்கேற்றம்

சாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழை இசையாசிரியர் பிரமஸ்ரீ ஆர். விசுவநாத ஐயரின் மாணவியான செல்வி பத்மாதேவியினது இசை அரங்கேற்றமும், மிருதங்க வித்துவான் க. ப. சின்னராசாவின் மாணவனான செல்வன் வி. ஜம்புநாதனின் மிருதங்க அரங்கேற்றமும் இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

வடமாநில வித்தியாதிபதியும், வடஇலங்கை சங்கீத சபைத் தலைவருமான திரு. இ. மாணிக்கவாசகர் தலைமையில் நல்லூர் இளங்கலைஞர் மன்றச்சார்பில் இவ்வரங்கேற்றம் நடைபெறும். (ஈ)

### விளம்பரம்

ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றுச்சாக்கு, ஒட்டை வெற்றுறம் (45 கலன்) ஆகியவை கேள்விமூலம் விற்பனவிற்கு உள்ளன.

சங்கக்காரியாலயில் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்று 15-7-74-ம் திகதிக்கு முன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
ஊர்காவற்றுறை பலநோக்குக்
139 கூட்டுறவுச் சங்கம்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் ... 1974-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
... 'Eelanadu' Telephone: 600.

### கச்சதீவு—

1-ம பக்கத் தொடர்ச்சி

எவ்வித முடிவும் ஏற்படவில்லை. 1973ல் ஆண்டில் திருமதி சிறிமா பண்டாரநாயகா இந்தியா சென்று பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து கச்சதீவுப் பிரச்னைக்குத் தீர்வு காணும் முயற்சி அதிகாரிகள் மட்டத்திலும் ராஜீயக் கட்டத்திலும் அந்தரங்கமாக நடைபெற்றுவந்தது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் 'ரண் ஒப் கச்' பிரதேசம் சம்பந்தமாக ஏற்பட்ட உடன்பாடும் பின்னர் கச்சதீவுப் பிரச்னையும் இந்தியாவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இப்போது ஏற்பட்டுள்ள உடன்படிக்கை கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்பதை வரையறுக்காவிட்டாலும் கடல் எல்லை உரிமை சம்பந்தமாக ஒரு முடிவைச் செய்துள்ளதன் மூலம் கச்சதீவு இலங்கைக்கே சொந்தமென்பதை உறுதிப்படுத்தியிருப்பதாகக் கருதப்படுகிறது.

இராமேஸ்வரத்திலிருந்து கச்சதீவு 16 மைல் தூரமென்றும் நெடுந்தீவிலிருந்து கச்சதீவு 12 மைல் தூரமென்றும் நிர்ணயிக்கப்பட்டதன் மூலமே கச்சதீவு இலங்கைக்கே சொந்தமாகுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆண்பிரதமர்கள் சாதிக்க முடியாத செயல்களை இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் இருபெண் பிரதமர்கள் சாதித்துள்ளனரென அரசியல் வட்டாரங்கள் பாராட்டுகின்றன!

கச்சதீவின் ... விஸ்திரணம் அரைமைல் சுற்றளவேயாகும் அது ஒரு கற்பாறைப் பூமியுமாகும். ......

### கச்சதீவிலிருந்து—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பயனுள்ள ... மை புகளுக்கு வழிகோலப்பட்டுள்ளது என்று இருநாடுகளும் கருத்து வெளியிட்டுள்ளன.

இசஞ்சாரமற் கச்சதீவு புனித ஸ்தலமாக விழங்குவதுடன் கனிப்பொருள் ஆராய்ச்சிக்கு உகந்த இடமாகவும் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

தற்போது இருநாடுகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் விரைவில் அங்கீகரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்படும் என்றும் இன்று அறிவிக்கப்பட்டது. (ஈ)

......

சென்னை, ஜூன் 28

இரு கண்களும் தெரியாத 26 வயது இளைஞர் ஒருவர் ஆங்கில விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நான்கு வயதிலிருந்தே இரு கண்களையும் இழந்துள்ள சுரேஷ்குமார் என்ற இவர் நாகர்கோயிலில் உள்ள ஒரு பள்ளியில் பதவி ஏற்றுள்ளார்.

5ம் கதை தொடர்ச்சியோ, 'நாடோடி' எவ்விதம் ஹாஸ்யரசனை கொண்ட சிறுகதைகள் எழுதினாரோ அவைகளை முன்னோடியாகக் கொண்டவையாயும் இன்னும் தமக்கே உரித்தான தனித்துவ முறையிலும் பலவேறு விடயங்களையும் எழுதி வாசகர்களை இதுவரும் மகிழ்வித்திருந்தார். மேலும் சமூக குறைபாடுகளையும் அவற்றில் நிலவும் நெளிவு சுழிவுகளையும் அறிந்து அவற்றைச் சாடும் வகையிலும் பன்முறைகளிலும் எழுதியிருந்தார். சுருக்கமாகச் சொல்லின் அவரின் திடீர் மரணம் ஈழத்தமிழ வாசகர்களுக்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் அவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கும் இறைவன் ஆறுதல் அளிப்பாராக.

க. குருநாதன்.
கதுறுவெல
பொலநறுவா.

### வி. என். பி. மறைவு

## அதிரவைத்த செய்தி

காட்டுவழியில் வி. என். பி. காலமானார் என்ற செய்தி நம்மை வெகுவாக அதிரவைத்துள்ளது. ஏனெனில் அவரது மரணநிலை மனத்தினை உருக்குவதாகவும் உள்ளது. இறைவனை நாடி காட்டுவழியில் சென்று கொண்டிருந்த அவரை, அவர் குதூகலிக்க இறைவன் தன்னுடன் அணைத்துக்கொண்டார் என்றோ, எவ்வளவு தூரம் உண்மைப் பக்தனாகிவிட்டார் என்றோ, உடலுக்கடிமைப்பட்ட நம்மால் கூறமுடியாது. ஆறமுடியாதுஉள்ளது நம் வி. என். பி. அவர்களின் பிரிவு. காட்டுவழியில் தானும் குதூகலமகச் சில சிந்தையுடன் சென்று நம்மையுமே அவ்வழிக்கு இழுத்துச் சென்ற அவருக்குத் திடீரென அவர் ஆரம்பக்கட்டுரையில் கூறிவைத்தது போல் இப்படி அசம்பாவிதம் வந்துசேர்ந்ததை நினைக்கும் போதுஉள்ளம் துயரால் நிரம்புகின்றது. அவர் இறைவனடி சேரும்வரை அவர் கைபட்ட எத்தனை வகையான அம்சங்களை சுவைத்துச் சிரித்துச், சிந்தித்துவந்தோம். தற்போதும்கூட அவர் கைபட்ட காட்டுவழி கதிர்காமத்தினை ஆவலுடன் படித்துக்கொண்டிருக்கவும் அவர் நம்மைவிட்டுப் பிரிந்திருப்பதனையும் நினைக்கும்போது துயரமாகஉள்ளது. 'ஈழநாடு' பத்திரிகை அவர் கைபட்டவற்றை இடைவிடாது பிரசுரித்து அவருக்கே எம்மையெல்லாம் அடிமைகளாக்கிவிட்டது. இப்போது 'ஈழநாடு' வி. என். பி.யின் பிரிவால் பெரும் துயர்கொள்ளும் நம்மையும் மறந்துவிடக்கூடாது. அப்பெரியாரையும் மறந்துவிடக்கூடாது,

தொடராகச் சில வாரங்களில் அவருக்கென தனி இடமொதுக்கி அவரைப் பற்றிய வகை வகையான அம்சங்களைத் தரின் நாமெல்லாம் சிறிது துயரம் ஆறுவோம். அவர் எழுதிய சிறந்த சிலவற்றைதெரிந்து அவற்றினைத் தொடர்ந்து மறுபிரசுரம் செய்யினும் நன்றாக இருக்கும்.

செல்வி ஆ. செல்வநாயகி
செல்வி ஆ. சிவயோகம்
கோண்டாவில்

0 0 0

## அளப்பரிய நஷ்டம்

தங்களின் 23-6-74 வார இதழில் 'காட்டுவழி கதிர்காமம் என்ற தொடரில் எழுதிவந்த வி. என். பி. காலமான செய்தியைக் கேட்டு வருத்தமுற்ற வாசகர்களில் யானும் ஒருவன். எவருமே இத்தொடர் கட்டுரை இப்படிப் பூர்த்தியாகாமல் போகுமென எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். கூற்றுவனின்சதி இங்கனமாக ஒரு சிறந்த எழுத்தாளரை எம்மத்தியின் இருந்து பிரித்தது ஈழத்து எழுத்துலகத்திற்கே அளப்பரிய நஷ்டம். பொதுவாக எல்லாத்துறையிலுமே எழுதும் ஆற்றல் பெற்றிருந்தமையை வழிப்போக்கன். அந்த ஆள், லாவண்யம், வி. என. பி. இத்தியாதி புனைபெயர்களைக் கொண்டும் இன்னும் சொந்தப் பெயரையும் கொண்டு வெளிவந்த விடயங்கள், கதைகள், கட்டுரைகளிலிருந்து எளிதில் யாவரும் அறிந்துகொண்டிருப்பர். இவைமட்டுமன்றி வானொலித் தமிழ் நிகழ்ச்சி உதவி அதிகாரியாகக் கடமையாற்றி அத்துறையிலும் சிறந்து விளங்கினாரெனவும் அறிய முடிகிறது. இன்னும் சிறப்பாகக் கூறின் 'புதுமைப்பித்தன்' எவ்வாறு பேச்சுவழக்கை ஒருவித எழுத்து நடையாகக் கொண்டு எழுதி

(4ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org